**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

தேதி : 09.07.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

**மேலும் வளர்ச்சி – மேலும் சாதனை என்பதே, இந்தியாவின் தேசிய நம்பிக்கை** என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் திரு. **அந்தோணி அல்பனீஸ்** ஆகியோர், இன்று மெல்போர்னில், **இந்தியா – ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சி மாநாட்டில்** பங்கேற்றனர்.

**பிரிக்ஸ்** நாடுகளைச் சேர்ந்த போக்குவரத்து அமைச்சர்கள் மாநாடு, மத்திய அமைச்சர் திரு. **நிதின் கட்கரி** தலைமையில், நாக்பூரில், வரும் 11-12 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. **ஜிதன்ராம் மாஞ்சி** இன்று புதுச்சேரியில், இத்துறையின் வளர்ச்சி குறித்து, மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

***மோடி – ஆஸ்திரேலியா -1 (16)***

**மேலும் வளர்ச்சி – மேலும் சாதனை** என்பதே, இந்தியாவின் தேசிய நம்பிக்கை என்றும், முன்னேறிய நாடாக மேம்படுவதே, நவீன இந்தியாவின் குறிக்கோள் என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று, ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில், இந்திய சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பிரதமர் பேசுகையில், கடந்த 12 ஆண்டுகளில் தற்போது 3ஆவது முறையாக தாம் ஆஸ்திரேலியா வந்து இருப்பதாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் புதிய உயரங்களை எட்டி வருவதற்கு, இதுவே சான்றாகும் என்று கூறினார்.

மெல்போர்ன் நகரின் கிரிக்கெட் மைதானம் உலகப் புகழ் பெற்றது என்பதையும், உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானம், அஹமதாபாத்தில் அமைந்து இருப்பதையும், பிரதமர் தமது உரையில் சுட்டிக்காட்டி, கிரிக்கெட் போன்ற துறைகளிலும், இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கமான உறவு இருப்பதற்கு, இதுவே அடையாளம் என்றார்.

இந்திய – ஆஸ்திரேலிய கூட்டாண்மை உறவுகளின் வலுவை பிரதிபலிப்பதாக, இந்நிகழ்ச்சி அமைந்து இருப்பதாக, ஆஸ்திரேலியப் பிரதமர் திரு. அந்தோணி அல்பனீஸ், தமது உரையில் கூறினார்.

***மோடி – ஆஸ்திரேலியா - 2 (13)***

முன்னதாக, திரு. நரேந்திர மோடி, திரு. அல்பனீஸ் ஆகிய இரு தலைவர்களும் இணைந்து, இந்தியா – ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்றனர். இந்தோ–பசிபிக் பிராந்தியத்தில், அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை பராமரிக்கும் வகையில், முக்கியமான கூட்டுப் பிரகடனம் ஒன்றில் இரு தலைவர்களும் கையெழுத்திட்டனர். இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், பிரதிநிதிகள் நிலையிலான பேச்சுவார்த்தைகளும் இந்த சந்திப்பின்போது இடம் பெற்றன. பின்னர், இரு தலைவர்களும் இணைந்து வெளிட்ட கூட்டறிக்கையில், பிராந்திய ஸ்திரத்தன்மை, எரிசக்தி பாதுகாப்பு, மற்றும் தொழில்நுட்ப புதுமைகளை உள்ளடக்கிய விரிவான கட்டமைப்பாக, இரு தரப்பு உறவுகளை மேம்படுத்துவதில் முக்கிய மாற்றங்கள் எட்டப் பட்டுள்ளதைப் பாராட்டினர். கூட்டு செய்தியாளர் கூட்டத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆற்றிய உரை குறித்து கூடுதல் விவரங்கள்…

***மோடி – ஆஸ்திரேலியா -3 (14)***

இந்தியாவும் – ஆஸ்திரேலியாவும், உலகின் முக்கிய ஜனநாயக நாடுகளாகவும், பிரதான கடல்சார் சக்திகளாகவும் திகழ்வதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள், ஆழமான பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில், முக்கிய காலகட்டம் ஒன்றை எட்டி இருப்பதாக, அவர் தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவில் உள்ள 10 லட்சம் இந்தியர்கள்தான், இந்தியா – ஆஸ்திரேலியா உறவுகளின் நாடித் துடிப்பாகத் திகழ்வதை, ஆஸ்திரேலியப் பிரதமர் சரியாக இனம் கண்டுள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

இருதரப்பு உறவுகளில் தற்போது எட்டப்பட்டுள்ள முக்கிய முடிவுகள், 20 ஓவர் கிரிக்கெட் போட்டி போல விறுவிறுப்பாகவும், இருதரப்பு உறவுகளுக்கு அளிக்கப் படும் முக்கியத்துவம், ஒருநாள் போட்டி போல கூர்மையாகவும், இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மை உறவுகள், டெஸ்ட் போட்டி போல **நீண்டகால அடிப்படை** கொண்டதாகவும், அமைந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி மேலும் குறிப்பிட்டார்.

*பிரிக்ஸ் (9)*

பிரிக்ஸ் நாடுகளைச் சேர்ந்த போக்குவரத்து அமைச்சர்கள் மாநாடு, மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தலைமையில், நாக்பூரில், வரும் 11-12 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இதை ஒட்டி, பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையிலான போக்குவரத்து பணிக்குழுவின் கூட்டம், நாக்பூரில் இன்று நடைபெற்றது. போக்குவரத்துத் துறையின் நீடித்த வளர்ச்சி, மற்றும், நகர்ப் புறங்களுக்கான மல்டி-மோடல் போக்குவரத்து வசதிகள் குறித்தும், இது தொடர்பான சிறந்த நடைமுறைகளை பிரிக்ஸ் நாடுகளுக்கு இடையில் பகிர்ந்து கொள்வது குறித்தும், பணிக்குழுக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது.

*ராதாகிருஷ்ணன் ஒடிசா –(14)*

இந்திய ஆழ்கடல் பகுதியில் மீன் பிடிப்பதற்கான அனுமதிக் கடிதங்களை இந்திய படகுகளுக்கு வழங்கும் பணிகளையும், ஒடிசா மாநில அரசின், ஆழ்கடல் மீன்பிடி இயக்கத்தையும், குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், புவனேஷ்வரில், இன்று தொடக்கி வைத்தார். ஆழ்கடல் மீன்வளத்தை சரியான முறையில் பயன்படுத்தி பாதுகாக்க, இந்நடவடிக்கைகள் பேருதவியாக அமையும் என்று அவர் தமது உரையில் கூறினார். இந்தியாவின் கடல் உணவு ஏற்றுமதி, தற்போது 73 ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டி, அதிகரித்து இருப்பதையும், இந்திய கடல் உணவுகள், 120 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படுவதையும், அவர் சுட்டிக் காட்டினார். 2047ஆம் ஆண்டிற்குள், முன்னேறிய நாடாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்கை எட்டுவதில், நீலப் பொருளாதாரத்திற்கு முக்கிய இடம் இருப்பதால், இளைஞர்கள், தொழில்நுட்பங்களின் அடிப்படையிலான நவீன மீன்பிடிப்பு மற்றும் கடல்சார் துறைகளில் அதிகம் ஈடுபட வேண்டும் என குடியரசு துணைத் தலைவர் மேலும் கேட்டுக் கொண்டார்.

*அமித் □ ா (13)*

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, நாளை புதுடெல்லியில், எல்லைப்புற மாவட்டங்களின் காவல் துறை கண்காணிப்பாளர்கள் மாநாட்டை, தலைமையேற்று நடத்துகிறார். குஜராத், ராஜஸ்தான், பஞ்சாப், உத்ராகண்ட், உத்தரப் பிரதேஷ், மேற்கு வங்கம் உள்ளிட்ட எல்லைப்புற மாநிலங்கள், மற்றும், ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தின் எல்லைப் புற மாவட்டங்களில் இருந்து, காவல்துறை கண்காணிப்பாளர்கள், இம்மாநாட்டில் பங்கேற்க உள்ளனர். எல்லைப் பகுதிகளின் நடப்பு பாதுகாப்பு நிலவரங்களை மதிப்பீடு செய்து, எல்லைப் பாதுகாப்பு கட்டமைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து, இம்மாநாட்டில் விவாதிக்கப் படும். எல்லைகளின் குறுக்கே ஊடுருவல்,

சட்டவிரோத குடி பெயர்வு, போதைக் கடத்தல், மற்றும் ட்ரோன் மூலமான தாக்குதல் அபாயத்தை கட்டுப் படுத்துவதற்கான மத்திய அரசின் முயற்சிகள் ஏற்கனவே தீவிரமாக்கப் பட்டுள்ள நிலையில், நாளைய கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

***ஜிதன்ராம் -1 (9)***

மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சி இன்று புதுச்சேரியில் இத்துறையின் வளர்ச்சி குறித்து, மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார். பிரதமரின் விஸ்வகர்மா திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களின் அமலாக்கத்தில் புதுச்சேரி எட்டியுள்ள முன்னேற்றத்தையும் அவர் மறு ஆய்வு செய்து பாராட்டினார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின், நிலுவையில் உள்ள கடன் விண்ணப்பங்கள் மீது, 3 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்க, வங்கிகளுக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்தார். மத்திய அமைச்சரின் பேட்டி குறித்து, கூடுதல் விவரங்கள்…

***ஜிதன்ராம் - 2 (10)***

புதுச்சேரியைச் சேர்ந்த சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், கடந்த 3 நிதியாண்டுகளில், மத்திய அரசிடம் இருந்து, மொத்தம் 19.56 லட்சம் ரூபாய் நிதியுதவி பெற்றுள்ளதாக, மத்திய அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சி தெரிவித்தார். ஆயினும், இந்நிறுவனங்களுக்கான மானியங்களின் விநியோகத்தில், வங்கிகளின் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை என்பதால், மாநில நிலை வங்கியாளர் கமிட்டி கூட்டத்தில், இது குறித்து பேசப்படும் என்று அவர் கூறினார். உற்பத்திப் பொருட்களுக்கு தரச் சான்றிதழ் பெறுவதிலும், இத்துறையினர் பல்வேறு சவால்களை சந்திப்பதால், இவர்கள் வர்த்தகம் புரிவதை எளிதாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அமைச்சர் மேலும் கூறினார்.

***ரங்கசாமி சந்திப்பு (2)***

இன்று புதுச்சேரிக்கு வருகை புரிந்த மத்திய அமைச்சர் திரு. ஜிதன்ராம் மாஞ்சியை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

***புதுச்சேரி – தடுப்பூசி (6)***

புதுச்சேரியில், 14 வயதுக்கு மேற்பட்ட, ஆனால் 15 வயது முடியாத பெண் குழந்தைகளுக்கு, கர்ப்பப் பை வாய்ப் புற்றுநோய் பாதுகாப்பு அளிப்பதற்கான HPV தடுப்பூசி போட, வரும் 12, 19 ஆகிய இரண்டு ஞாயிற்றுக்

கிழமைகளில், அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. கூடுதல் விவரங்களைப் பெற, யு-வின் Citizen App செயலியை பயன்படுத்தலாம் என்றும் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

***எழுத்தறிவு (8)***

நாட்டில், முழு எழுத்தறிவு பெற்ற 6ஆவது மாநிலமாக உத்ராகண்ட் மேம்பட்டுள்ளது. இதற்கான பிரகடனத்தை உத்ராகண்ட் ஆளுநர், அண்மையில் அங்கீகரித்துள்ளார். கல்வி மற்றும் எழுத்தறிவு நிலவரங்கள் குறித்து, 2020ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையின் கீழ், மத்திய கல்வி அமைச்சகத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் முழுமையாக எட்டப்பட்டதைத் தொடர்ந்து, இப்பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. நாட்டில் ஏற்கனவே, மிசோரம், கோவா, திரிபுரா, ஹிமாச்சலப் பிரதேசம், சிக்கிம் ஆகிய 5 மாநிலங்கள், முற்றிலும் எழுத்தறிவு பெற்ற மாநிலங்களாக அறிவிக்கப் பட்டுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

***செயற்கை நுண்ணறிவு (12)***

பன்னாட்டு நிறுவனங்களின் முக்கிய செயல்பாடுகளை, சொந்த நாட்டிற்கு வெளியில் இருந்து மேற்கொள்ளும் உலகத் திறன் மையங்களில் பாதி, தற்போது இந்தியாவில் இருப்பதாக, மத்திய அரசின் தலைமை பொருளாதார ஆலோசகர் டாக்டர் அனந்த கிருஷ்ணன் கூறியுள்ளார். இந்திய மக்களின் இதயத்தில், திறமைக்கு முக்கிய இடம் இருப்பதே இதற்குக் காரணம் என்று, அவர் இன்று புதுடெல்லியில், உலகத் திறன் மேம்பாட்டு மையங்களுக்கு இடையிலான வர்த்தக உச்சி மாநாட்டில் பேசுகையில் கூறினார். சிஐஐ தொழில்-வர்த்தக கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இம்மாநாட்டின் தொடக்க விழாவில், மத்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலர் திரு. எஸ்.கிருஷ்ணன் பேசுகையில், செயற்கை நுண்ணறிவுத் தீர்வுகளுக்கான உலகின் தலைநகரமாக இந்தியாவை மேம்படுத்த அரசு உறுதி பூண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

***நிதி ஆயோக் (6)***

போர் முக்கியத்துவம் வாய்ந்த நவீன துறைகளில், அபூர்வ கனிமங்களின் தேவை குறித்து, நிதி ஆயோக் இன்று புதுடெல்லியில், சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்பினருடன், ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியது. உயர் கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி அமைப்புகள், மற்றும், தொழில்துறை பிரதிநிதிகளும், அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு, முக்கிய கனிமங்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகள் குறித்து விவாதித்தனர்.

***நட்டா மருத்துவம் (10)***

உயரமான மலைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கான மருத்துவம் குறித்து, ஹிமாச்சல் மாநிலம், கீலாங் பகுதியில், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் சார்பில், ஆராய்ச்சி மையம் அமைக்கும் பணிகளுக்கு, வரும் சனிக்கிழமை, மத்திய சுகாதார அமைச்சர் திரு. J.P. நட்டா அடிக்கல் நாட்டுகிறார். இமயமலை உள்ளிட்ட உயரமான பகுதிகளில், சாதகமற்ற கடும் குளிர்ச் சூழலுக்கு இடையிலும், உடல் ஆரோக்கியத்தை உரிய முறையில் தகவமைத்துக் கொள்வது குறித்து, முக்கிய ஆராய்ச்சிகள் இம்மையத்தில் மேற்கொள்ளப்படும். தொலைநிலை மருத்துவம், ட்ரோன் மூலமான மருந்து விநியோகம், மற்றும் டிஜிட்டல் சுகாதார வசதிகளை உள்ளடக்கியதாக இம்மையம் அமையும் என்றும், மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

***வானிலை (10)***

காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக, இன்றும் – நாளையும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள், மற்றும், நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதர மேற்குத் தொடர்ச்சி மாலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் கூடிய மிதமான மழைக்கும், தமிழகத்தின் ஏனைய பகுதிகள், மற்றும், புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், லேசான மழைக்கும் வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள வங்கக் கடல் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

***டென்னிஸ் (6)***

விம்பிள்டன் டென்னிஸ் **மகளிர் ஒற்றையர்** பிரிவில், இன்று மாலை நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில், அமெரிக்க வீராங்கனை **கோக்கோ காஃப்** – செக் நாட்டின் **கரோலினா முச்கோவா** ஆகியோர் மோதுகின்றனர். தொடர்ந்து நடைபெற உள்ள 2ஆவது அரையிறுதிப் போட்டியில், செக் நாட்டின் **லிண்டா நோஸ்கோவா**, உக்ரேனிய வீராங்கனை **மார்த்தா கோஸ்ட்யுக்**-குடன் மோதுகிறார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

**மேலும் வளர்ச்சி – மேலும் சாதனை** என்பதே, இந்தியாவின் தேசிய நம்பிக்கை என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ஆஸ்திரேலிய பிரதமர் திரு. **அந்தோணி அல்பனீஸ்** ஆகியோர், இன்று மெல்போர்னில், **இந்தியா – ஆஸ்திரேலியா** **வருடாந்திர உச்சி மாநாட்டில்** பங்கேற்றனர்.

**பிரிக்ஸ்** நாடுகளைச் சேர்ந்த போக்குவரத்து அமைச்சர்கள் மாநாடு, மத்திய அமைச்சர் திரு. **நிதின் கட்கரி** தலைமையில், நாக்பூரில், வரும் 11-12 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

மத்திய சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் திரு. **ஜிதன்ராம் மாஞ்சி** இன்று புதுச்சேரியில், இத்துறையின் வளர்ச்சி குறித்து, மறு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.